# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை – 2015

**தரம் - 11** **வரலாறு – I** **நேரம் : 1.00 மணித்தியாலம்**

சுட்டெண்: ............................................ புள்ளிகள் : 100

### பகுதி - I

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாக்களுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.
* 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

1) "நிகழ்காலமும் எதிர்காலமும் நிச்சயமாக இறந்த காலத்திலிருந்து கட்டியெழுப்பப்படுவதுடன் அதன் அடையாளங்களையும் காண முடியும் அதனை மறந்து செயற்படுவது அத்திவாரமின்றி கட்டடமொன்றைக் கட்டுவதற்கு ஒப்பானதாகும்." எனக் கூறியவர்.
   1) ஜி.எம்.திரெவெலியன் 2) ஈ.எச். கார்
   3) ஜவஹர்லால்நேரு 4) ஹெரடோரஸ்

2) 'தாமிரபரணி', 'பாரசமுத்திரம்' ஆகிய பெயர்களால் இலங்கையை அழைத்த நூல்
   1) அர்த்த சாஸ்திரம் 2) ராஜதரங்கனி
   3) மகாபாரதம் 4) மணிமேகலை

3) இலங்கை தொடர்பான தகவல்கள் நிரலில் I இலும் அவை குறிப்பிடும் கல்வெட்டுக்கள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I ஐ நிரல் II இல் இணைக்கும் போது சரியாக அமையும் விடைத்தொகுதி

| நிரல் - I | நிரல் - II |
|---|---|
| 1) ஐந்து அமைச்சர் பரம்பரை | A - பதுளைத் தூண் கல்வெட்டு |
| 2) வர்த்தக சந்தையொன்றின் நிர்வாகம் | B - மிகிந்தலை சுவர்க் கல்வெட்டு |
| 3) ஆராமை நிர்வாகம் | C - கொடவாய தூண் கல்வெட்டு |
| 4) துறைமுகவரி அறவிடப்பட்டமை | D - கந்துருவெவக் கல்வெட்டு |
| | E - வல்லிபுரம் பொற்சாசனம் |

   1) DBEA 2) CBAD 3) BEAC 4) DABC

4) பதினாறு மகாயனப் பதங்களில் சிந்து நதியை அண்டி அமைக்கப்பட்ட குடியிருப்புக்களில் ஒன்று
   1) கோசலம் 2) காந்தாரம் 3) மல்ல 4) குரு

5) மகதப் பேரரசின் தலைநகரைப் பாடலிபுரத்திற்கு மாற்றியமைத்த மன்னன்
   1) அசோகன் 2) அஜாசத்ரு 3) பிம்பிசாரன் 4) தனநந்தன்



kalvi.lk

6) A - இரகுவம்சம்
B - அர்த்த சாஸ்திரம்
C - மேக தூதம்
D - ராஜ தரங்கனி
மேலே தரப்பட்டுள்ள நூல்களுள் காளிதாசரால் எழுதப்பட்டுள்ள நூல்களின் விடைத் தொகுதி
1) A B 2) C B 3) C D 4) A C

7) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதனுடைய எலும்புத்துண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ள குகைகள் அடங்கிய தொகுதி
1) நில்கல, பெலிகல்கே 2) பெலிகல்கே, பாகியன்கல
3) இராவணன் எல்ல, கித்துல்கல 4) பட்டதொம்ப, அலுலென

8) 'சாகாலிக' என்ற சமயப் பிரிவினருக்கு மகாசேன மன்னனால் கையளிக்கப்பட்ட விகாரை
1) ரூவான் வெலிசாய விகாரை 2) தூபாராம விகாரை
3) ஜேதவனராம விகாரை 4) கலன்தக விகாரை

9) கீழே நிரல் I இல் இராசரட்டை ஆட்சியாளர்களும் நிரல் II இல் ஆக்கிரமிப்பாளரது பெயர்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I உடன் நிரல் II ஐத் தொடர்புறுத்தும்போது அமையும் விடைத்தொகுதி.

| நிரல் - I | நிரல் - II |
|---|---|
| 1) சூரத்திஸன் | A - எல்லாளன் |
| 2) அசேலன் | B - 3ஆம் கிருஷ்ணன் |
| 3) வட்டகாமினி | C - புலஹதத்த |
| 4) 4ஆம் மகிந்தன் | D - சேனன், குத்திகன் |

1) DACB 2) DCAB 3) DCBA 4) DBAC

10) தப்போவ வாவி, மாகல்ல வாவி, ஹுருளு வாவி ஆகிய குளங்களுக்கு நீரை வழங்குகின்ற நதிகள் முறையே
1) யான் ஓயா, தெதுரு ஓயா, மீ ஓயா 2) தெதுரு ஓயா, யான் ஓயா, மீ ஓயா
3) மீ ஓயா, யான் ஓயா, தெதுரு ஓயா 4) மீ ஓயா, தெதுரு ஓயா, யான் ஓயா

11) எச்சக் குன்றுகளோ பாறைத்தொடர்களோ இல்லாதவிடத்தில் நிலத்தின் அமைப்புக்கேற்ப குளக்கட்டைக் கொண்டமைந்த குளம்
1) மின்னேரியா 2) இராட்சதக்குளம்
3) சொரபொர வாவி 4) பராக்கிரம சமுத்திரம்

12) தேரவாத பௌத்த மதத்தின் மத்திய நிலையமாக விளங்கிய விகாரை
1) அபயகிரி விகாரை 2) ஜேதவனராம விகாரை
3) மகா விகாரை 4) ருவான்வெலிசாய விகாரை

13) * பெலிகல தலதாமாளிகையை அமைத்தமை
* விஜய சுந்தர ராமய விகாரையை அமைத்தமை
* களனி விகாரையை மறுசீரமைத்தமை
மேலே தரப்பட்ட விடயங்களுடன் தொடர்புபட்ட மன்னன்
1) 1ஆம் விஜயபாகு 2) 3ஆம் விஜயபாகு
3) 1ஆம் புவனேகபாகு 4) 2ஆம் பராக்கிரமபாகு

14) கம்பளை இராட்சிய ஆட்சியாளன் வீரஅழகேஸ்வரனைச் சிறைப்பிடித்துச் சீனாவுக்குக் கொண்டு சென்ற தளபதி
1) செங்ஹோ 2) யுங்லோ
3) போதி மாபா 4) மித்த தளபதி



kalvi.lk

15) டில்லி சுல்தான் பேரரசின் ஆட்சியாளர்கள் நிரல் I இலும் அவர்களது அரச வம்சங்கள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I உடன் நிரல் II ஐ இணைக்கும் போது சரியாக அமையும் விடைத்தொகுதி.

| நிரல் - I | நிரல் - II |
|---|---|
| 1) இல்துத்மிஷ் | A - கல்ஜி வம்சம் |
| 2) ஜலாலுத்தீன் | B - செய்யது வம்சம் |
| 3) கியாஸுத்தீன் | C - அடிமை வம்சம் |
| 4) முபாரக்ஷா | D - லோதி வம்சம் |
| | E - துக்ளக் வம்சம் |

1) DABC 2) EACD 3) CAEB 4) BACD

16) பாமினி என்னும் இஸ்லாமிய பேரரசுடன் அடிக்கடி பிரச்சினைக்குட்பட்ட தென்னிந்திய இந்து இராட்சியம்

1) சோழப் பேரரசு 2) பல்லவப் பேரரசு
3) பாண்டியப் பேரரசு 4) விஜய நகரப் பேரரசு

17) 'கோள்கள் சூரியனை நீள்வட்ட வடிவப் பாதையில் சுற்றி வருகின்றன என்பதைக் கண்டு பிடித்தவர்

1) நிக்கலஸ் கொப்பர்ணிகல்ஸ் 2) கலிலியோ கலிலி
3) ஜோகன்னஸ் கெப்லர் 4) ஐசாக் நியூட்டன்

18) பைபிளை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தவர்

1) ஜோன்வைக்ளிப் 2) மார்ட்டின் லூதர்
3) ஜோன் கல்வின் 4) உல்றிச் ஸ்விங்லி

19) பிரான்ஸிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவியவர்

1) றிச்சல்யு 2) கோல் பெயா 3) மசாரின் 4) 14ஆம் லூயி

20) இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியுடன் மட்டும் தொடர்புடைய சம்பவங்களைக் குறித்து நிற்கும் விடைத்தொகுதி.

A - தர்மபாலனின் சிலைக்கு முடிசூட்டுதல்
B - பிரான்ஸிஸ்கன் சபையைச் சார்ந்த குருமார்களின் இலங்கை வருகை
C - கண்டி இராட்சியம் கைப்பற்றப்பட்டமை
D - கண்டி மன்னனுடன் விலெம்பல்க் உடன்படிக்கை மேற்கொண்டமை

1) A B 2) A C 3) B D 4) A D

21) கண்டி இராட்சியத்தை ஆட்சி புரிந்த முதலாவது நாயக்க மன்னன்

1) வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் 2) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்
3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 4) ஸ்ரீ விஜய ராஜசிங்கன்

22) கீழே நிரல் I இல் கைத்தொழில் புரட்சியாளர்களது பெயர்களும் நிரல் II இல் அவர்களது கண்டுபிடிப்புக்களும் தரப்பபட்டுள்ளன. அவற்றைச் சரியாகப் பொருத்தும் போது அமையும் விடைத்தொகுதி

| நிரல் - I | நிரல் - II |
|---|---|
| 1) எலியன்ஸ் ஹோர்வே | A - மோட்டார் வாகனம் |
| 2) டெம்ளர் | B - தையல் இயந்திரம் |
| 3) ஹம்ரி டேவி | C - பாதுகாப்பு விளக்கு |
| 4) ஜேம்ஸ் வோர்ட் | D - நீராவி இயந்திரம் |

1) BDCA 2) DBAC 3) BACD 4) CBAD



kalvi.lk

23) கைத்தொழில் புரட்சியின் விளைவு அல்லாதது
   1) செல்வந்தர், ஏழை என்ற பிரிவினர் தோற்றம் பெற்றமை
   2) மானிய முறைமை தோற்றம் பெற்றமை
   3) சமவுடமைவாதம், பேரரசுவாதம் என்பன ஏற்பட்டமை
   4) சூழல் மாசடைந்தமை

24) பிரான்சியப் புரட்சி நடைபெற்றபோது பிரான்சில் ஆட்சி புரிந்த மன்னன்
   1) 13ஆம் லூயி   2) 14ஆம் லூயி   3) 15ஆம் லூயி   4) 16ஆம் லூயி

25) A - சொல்வரீன் தீர்வையற்ற வர்த்தக சங்கம்
   B - காபொனாரி இயக்கம் உருவாக்கப்பட்டமை
   C - கழுர் புளெம்பியர்ஸ் உடன்படிக்கையை மேற்கொண்டமை
   D - கால்ஸ்பார்ட் ஆணை நிறைவேற்றம்
   மேலே தரப்பட்டுள்ளவற்றுள் இத்தாலியின் ஐக்கியத்துடன் மட்டும் தொடர்புடைய விடைத்தொகுதி
   1) A யும் B யும்   2) B யும் C யும்   3) C யும் D யும்   4) A யும் C யும்

26) இலங்கைக்கு வந்த பிரெட்ரிக்நோர்த்தினால் அறிந்து கொள்ள முடியாத சம்பவமாக அமைவது.
   1) சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கராவினால் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமை
   2) 1796ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானியர் வசமாகியமை
   3) போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லாந்தர் இலங்கையைத் தமது ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தமை
   4) 1562ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் முல்லேரியாப் போரில் தோற்கடிக்கப்பட்டமை

27) இலங்கைக்கு முதன்முதலில் வாக்குரிமையை அறிமுகப்படுத்திய அரசியல்யாப்பு
   1) கோல்புறூக் - கமரன்   2) டொனமூர்
   3) குறூமக்கலம்   4) மனிங்

28) 1848ஆம் ஆண்டு கண்டிக் கலகம் இடம்பெற்றபோது இருந்த பிரித்தானிய ஆளுநர்
   1) டொரிங்டன் பிரபு   2) பிரெட்ரிக் நோர்த்
   3) எட்வேட் பாண்ஸ்   4) தேமஸ் மெயிட்லண்ட்

29) அரசன் தனக்குத் தேவையான சேவையை வழங்கும் அதிகாரிகளுக்கு வழங்கிய நிலம் அழைக்கப்பட்ட விதம்
   1) நிந்தகம்   2) கபாடகம்   3) மானிய நிலம்   4) சேவாபரவேணி

30) * மத்திய பாடசாலைகளின் ஆணைக்குழு உருவாக்கம்
   * தேசிய பரீட்சை நடாத்தப்படல்
   * உதவி பெறும் நன்கொடைப் பாடசாலை அறிமுகம்
   மேலே தரப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தங்களுடன் தொடர்புடைய கல்விக்குழு
   1) மோர்கன் குழு   2) மெக்கன்ஸி குழு
   3) டொனமூர் குழு   4) கோல்புறூக் குழு

31) உலக அபிமானி என அழைக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்
   1) மகாத்மா காந்தி   2) தடாபாய் நபரோஜி
   3) சுரேந்திரநாத் பானர்ஜி   4) பாலகங்காதர திலகர்

32) யப்பானிய பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட பெயர்
   1) செனட்   2) லோக்சபா
   3) டயற்   4) டைமியோ



kalvi.lk

33) “நாடுகளுக்குச் சுதந்திரம் தேவை. இனங்களுக்கு விடுதலை தேவை மக்களுக்குப் புரட்சி அவசியம்” எனக் கூறியவர்

1) சூ-என்-லாய்
2) யுவாங்-ஷி-காய்
3) சுன்-யத்-சென்
4) மாவோ சேதுங்

34) ‘மூன்று பேரரசுகளின் சங்கம்’ எனும் அமைப்பினுள் உள்ளடங்கும் நாடுகள் அடங்கும் விடைத்தொகுதி

1) பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா
2) ரஷ்யா, ஆஸ்திரியா, ஜேர்மனி
3) இத்தாலி, ஜேர்மனி, ரஷ்யா
4) பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி

35) முசோலினியின் “லாத்தரன் உடன்படிக்கை” மூலம் உதயமான அரசு

1) இத்தாலி
2) இஸ்ரேல்
3) பலஸ்தீனம்
4) வத்திக்கான்

36) இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா பங்குபற்றியமைக்கான காரணம்

1) போரின்துறைமுகம் தாக்கியளிக்கப்பட்டமை
2) போலந்து தாக்கப்பட்டமை
3) சரஜீவோ சம்பவம்
4) லுசித்தானியா கப்பல் தாக்கியளிக்கப்பட்டமை

37) ஜனநாயக ஆட்சியின் வழிகாட்டிகளாக நாமே இருக்க வேண்டும் எனக் கூறிய அமெரிக்கத் தலைவர்

1) ஹரிட்ரூமன்
2) ஆபிரகாம் லிங்கன்
3) பிராங்ளின் ரூஸ்வெல்ட்
4) ஜோர்ஜ் வொஷிங்டன்

38) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அமைப்பில் வீற்றோ அதிகாரங்களைக் கொண்டுள்ள நாடுகளின் தொகுதி

1) அமெரிக்கா, ஜேர்மனி, ரஷ்யா
2) இத்தாலி, ஆஸ்திரியா, சீனா
3) ரஷ்யா, இந்தியா, அமெரிக்கா
4) பிரித்தானியா, சீனா, பிரான்ஸ்

39) “அடிப்படை மனித உரிமைகள்” முதன் முதலாக சேர்க்கப்பட்ட இலங்கையின் அரசியல் யாப்பு

1) 1978ஆம் ஆண்டு யாப்பு
2) 1972ஆம் ஆண்டு யாப்பு
2) டொனமூர் யாப்பு
4) சோல்பரி யாப்பு

40) இலங்கையில் ஆட்கொணர்வு ஆணையைப் பிறப்பிக்கும் அதிகாரங்களைக் கொண்ட நீதிமன்றம்

1) மேன் முறையீட்டு நீதிமன்றம்
2) உச்ச நீதிமன்றம்
3) மாவட்ட நீதிமன்றம்
4) நீதவான் நீதிமன்றம்



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை - 2015
## வரலாறு – II

**தரம் - 11** **நேரம் : 3 மணித்தியாலங்கள்**

**சுட்டெண்:** ............................................ **புள்ளிகள் :** | 100

**கவனிக்க:**

- ∗ பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது
- ∗ பகுதி II இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ∗ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

01) அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களை தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i) மகாகம, மினிப்பே அணை, கந்த ரோடை, மாணிக்க கங்கை, காலி, கலாவாவி, கன்னொருவ, மகியங் கணை, யாப்பகூவ சிகிரியா.

(10 புள்ளிகள்)

ii) கோவா, சுமாத்திரா, காவேரி, டோக்கியோ, ஏடன் துறைமுகம், பாரசீகக் குடா, உரோம், தாய்வான்.

( 8 புள்ளிகள்)

ஆ) i) மேலே A B C D என தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை முறையே உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. தனது அமைச்சர்களுக்கு தர்ம மகா மாத்ரா பதவியை அறிமுகப்படுத்தியவன்

B. யாழ்ப்பாண இராட்சியம் பற்றி தனது குறிப்பிலே கூறியுள்ள அராபிய தேச சஞ்சாரி.

C. சுதந்திர இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி

D. 2ஆம் உலகப்போருக்கான உடனடிக் காரணத்துடன் சம்பந்தப்பட்ட நபர்

( 4 புள்ளிகள்)

ii) இங்கு A B ஆகிய கலை நிர்மாணிப்புக் களை நன்றாகப் பரிசீலித்து கேட்கப்பட் டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை உமது விடைத்தாளில் முறையே எழுதுக.

1) இக் கலைப்படைப்பு யாது?




kalvi.lk

2) இக் கலைப்படைப்பு எந்த இராச தானிக்குரியது?
3) இக் கலைப்படைப்பு எந்த வாவிக்கண் மையில் அமைந்துள்ளது?
4) இக்கலைப்படைப்பின் சிறப்பம்சம் யாது?


( 4 புள்ளிகள்)

(A)



iii) 1) இக் கலைப்படைப்பு யாது?
2) இது எத்தேவைக்காக அமைக்கப் பட்டது?
3) இது அமைந்துள்ள இடம் எது?
4) இது வேறு எப்பெயரால் அழைக்கப் படுகின்றது?

(B)



(4 புள்ளிகள்)

## பகுதி - II

2) i) கீழே A, B, C என குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடைய இடங்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து அதே ஒழுங்கில் குறிப்பிடுக.

A. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் உணவு சமைப்பதற்கான அடுப்பு கண்டுபிடிக்கப்பட்ட இடம்

B. 27000 வருடங்களுக்கு முன்பு உப்பு பயன்படுத்தப்பட்ட ஆதாரம் கிடைக்கப் பெற்ற இடம்.

C. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.

[பெலியன் குகை, நில்கல, இராவணன் எல்ல, கிந்துள்கல, பாகியன்கல]

(3 புள்ளிகள்)

ii) D, E, F, G ஆகியவை குறிக்கும் ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சிகளுடனும் தொடர்புடையவர்களை ஒழுங்கு முறைப்படி குறிப்பிடுக.

D. இலங்கையின் முதலாவது தூபியை அமைப்பித்தமை

E. தனது சிறிய தந்தையின் மூலம் தக்கணதேச ஆட்சியைப் பெற்றமை.

F. இலங்கையில் நிக்காய வேறுபாடு தோற்றம் பெற வித்திட்டமை.

G. மகாயான பௌத்தத்தை இலங்கையில் பரப்புவதற்கு அரச அனுசரணை வழங்கியமை.

(4 புள்ளிகள்

iii) துட்டகைமுனு மன்னனின் சேவைகளை அரசியல், சமயப் பணிகயை குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) பண்டைய இலங்கையிலிருந்த மிகச் சிறிய நிர்வாக அலகாகக் கருதப்படும் கிராமசபை செயற்பட்ட விதத்தை மூன்று விடையங்களாகக் கொண்டு விளக்குக.

(6 புள்ளிகள்)



Education
අධ්‍යාපන
kalvi.lk

3) i) கீழே தரப்பட்ட பட்டியலில் இருந்து கீழ் வரும் மன்னர்களின் நீர்ப்பாசன நிர்மாணங்களைத் தெரிவு செய்து A, B, C என்ற ஒழுங்கில் எழுதுக.

A. வசபன்

B. 2ஆம் முகலன்

C. மகாசேனன்

[குருளுவாவி, கலாவாவி, நாச்சதுவவாவி, கிரித்தலைவாவி, மகாவிலாச்சிய]

(3 புள்ளிகள்)

ii) இராசரட்டைப் பிரதேசத்தில் நீர் வழங்கல் முறை தேவைப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) நீர்வள நாகரிக காலத்தில் பண்டைய தொழில்நுட்பவியலாளர்கள் கால்வாய்களை அமைக்கும்போது கையாண்ட நுட்ப முறைமைகளை இரு விடயங்களின் துணையுடன் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) நீர்வள நாகரிக காலத்தின் பொருளாதார கோலத்தினை பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்குக.

1. தைத்தொழில்
2. விவசாயம்
3. வர்த்தகம்

(6 புள்ளிகள்)

04) i) கீழே A, B, C ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஆட்சியாளர்களால் தெரிவு செய்யப்பட்ட பிராந்திய அரசுகளை முறையே குறிப்பிடுக.

A - தளபதி சுப

B - தளபதி சங்க

C - புவனேகபாகு ஆதிபாதா

(3 புள்ளிகள்)

ii) கம்பளை இராசதானி தலைநகராக தெரிவுசெய்யப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) கோட்டை இராட்சியத்தில் 6ஆம் பராக்கிரமபாகுவின் அரசியல் முக்கியத்துவத்தினை இரு விடயங்களின் துணையுடன் வளக்குக.

(5 புள்ளிகள்)

iv) இராட்சியங்கள் தென்மேற்கு நோக்கிய இடப்பெயர்வு காலத்தில் ஏற்பட்ட கலாசார மாற்றங்களை சமயம், இலக்கியம், கட்டடம் ஆகியவற்றின் கீழ் விளக்குக.

(6 புள்ளிகள்)

05) i) 1521ஆம் ஆண்டு விஜயபாகு கொலையைத் தொடர்ந்து கோட்டை இராட்சியத்தில் தோற்றம் பெற்ற மூன்று உப இராட்சியங்களும் எவை?

(3 புள்ளிகள்)

ii) கீழே தரப்பட்டுள்ள பெயர்களைக் கொண்ட மன்னர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து A, B, C, D என்ற ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A. மகா ஆஸ்தான குமார

B. டிக்கிரி பண்டார

C. கொனப்பு பண்டார

D. கண்ணுச்சாமி

(4 புள்ளிகள்)



kalvi.lk

[1ஆம் விமலதர்ம சூரியன், 2ஆம் விமலதர்ம சூரியன், 1ஆம் இராஜசிங்கன், 2ஆம் இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன், விக்கிரமராஜசிங்கன்]

iii) முதலாம் விமலதர்ம சூரியனின் சமய அரசியல் சேவைகளை ஒவ்வோர் உதாரணம் தந்து விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) கி.பி.1766 இல் ஒல்லாந்தருடன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க அரசன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை கண்டி இராட்சியத்திற்கு பிரதிகூலமாக இருந்த விதத்தை மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

06) i) A, B, C ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ள ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களை முறையே குறிப்பிடுக.

A. 1920
B. 1947
C. 1978

(3 புள்ளிகள்)

ii) டொனமூர் அரசியலமைப்பின் பிரதான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) 1818ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

( 5 புள்ளிகள்)

iv) சுதந்திரத்தின் பின்னர் நெற்பயிர்ச் செய்கையின் விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

## பகுதி - III

07) i) A - ஆரியர் இந்தியாவில் குடியேறிய காலம்.
B - இருக்கு வேதத்தின்படி ஆரியர்கள் ஆரம்பத்தில் குடியேறிய பிரதேசம்.
C - விந்தியமலைத் தொடரைத் கடந்து ஆரியர்கள் குடியேறிய பிரதேசம்.
மேலே தரப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

[ முந்திய வேத காலம், பிந்திய வேத காலம்,டெக்கான் மேட்டு நிலம், தக்கண மேட்டு நிலம், பஞ்சாப், கோசலம்]

( 3 புள்ளிகள்)

ii) இந்தியாவின் ஆரிய சமுக அமைப்பில் காணப்பட்ட வருணப்பாகுபாடுகள் நான்கிளையும் ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) மகதத்தை பேரரசாக மாற்றுவதில் அதன் தொடக்க ஆட்சியாளர்கள் பின்பற்றிய கொள்கைகளை இரு விடயங்களின் துணையுடன் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv) குப்தர்கால கலை வளர்ச்சியை, சிற்பக்கலை, கட்டடக்கலை, சித்திரக்கலை என்பவற்றினை ஒவ்வோர் உதாரணத்தின் மூலம் விளக்குக.

(6 புள்ளிகள்)



kalvi.lk

08) i) ஜப்பானின் மானிய முறையின் குழப்பகரமான காலகட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்த ஆட்சியாளர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)

iii) இந்தியாவில் இடம்பெற்ற சிப்பாய் கலகத்தினால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.
(5 புள்ளிகள்)

iv) ஜப்பானின் மெய்ஜி காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றிளைக் குறிப்பிட்டு விளக்குக.
(6 புள்ளிகள்)

09) i) A - தாந்தே
B - பிரான்ஸிஸ்பேகன்
C - இராஸ்மஸ்
மேலே A, B, C என தரப்பட்டுள்ள நபர்கள் எந்நாட்டவர்கள் என்பதனைக் குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

ii) பின்வரும் நாடுகளைக் கண்டுபிடித்த நபர்களை A, B, C, D ஒழுங்கு முறைப்படி குறிப்பிடுக.
A. கள்ளிக்கோட்டை
B. புயல்முனை
C. ஸ்பானியோலா
D. பிலிப்பைன்ஸ்
(4 புள்ளிகள்)

iii) நிலமானிய முறைமையின் அரசியல் அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.
(5 புள்ளிகள்)

iv) மறுமலர்ச்சிக் காலத்தில் A - கலைகள், B - விஞ்ஞானம் ஆகிய துறைகள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்ட வளர்ச்சிகளை இவ்விரண்டு உதாரணங்களுடன் விளக்குக.
(6 புள்ளிகள்)

10) i) முதலாம் உலகப்போரில் பங்கு பற்றிய
A - நட்பு நாடுகள் அணியில் அங்கம் வகித்த நாடுகள் இரண்டினையும், B - மத்திய ஐரோப்பிய வல்லரசுகள் அணியில் அங்கம் வகித்த நாடு ஒன்றினையும், முறையே குறிப்பிடுக.
(3 புள்ளிகள்)

ii) A- இரண்டாம் உலக மகாயுத்தத்தில் யப்பான் மீது அணுகுண்டு வீசுவதற்கு அனுமதியளித்த அமெரிக்க ஜனாதிபதி
B - சுவெஷ்டிகா இலச்சனையுடன் கூடிய ஜேர்மானிய தேசியக் கொடியை உருவாக்கியவர்.
C - பொதுவுடமைக் கோட்பாட்டினடிப்படையில் சுயஸ் கால்வாயை தேசிய சமவுடைமையாக்கியவர்.
D - இரண்டாம் உலகப்போரின் முடிவில் சரணடைதலுக்கான கடிதத்தினை சமர்ப்பித்த ஜப்பானிய மன்னன்
மேலே தரப்பட்டுள்ள விபரங்களுடன் தொடர்புடைய நபர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.
[ பிராங்ளின்ரூஸ்வெல்ட், ஹிரோஹிந்தோ, முசோலினி, ஹிட்லர், ஹரிட்ருமன், அப்துல்கமால் நசார் ]
(4 புள்ளிகள்)


iii) சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.
(5 புள்ளிகள்)

iv) முதலாம் உலகமகா யுத்தத்துக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.
(6 புள்ளிகள்)




kalvi.lk

Index No:..............................



Index No:...............................



Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page